விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:ஆறு

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

## ஐ.தே.க.எம்.பி. ஜெயலத் ஜெயவர்த்தன குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணை

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயலத் ஜெயவர்த்தன, பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரின் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

தனது சட்டத்தரணியுடன் பிற்பகல் 2.30 மணிக்கு அவர் விசாரணைக்காக சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடந்த மாதம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தபோது நாடாளுமன்ற அமர்வில் இருந்ததால் விசாரணைக்கு முன்னிலையாக முடியாது என்றும் பின்னர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால குடிசன மதிப்பீட்டை நிறுத்தக் கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்

### சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழு அனுப்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டின் இடைக்கால குடிசனக் கணிப்பை மேற் கொள்ள வேண்டாமென வலியுறுத்தி சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி வடக்குக் கிழக்கு அரசாங்க அதிபர்களுக்கு இடைக்கால குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு பணித்திருந்தார்.

இந்நிலை (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பாதுகாப்பு விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## யப்பானிய வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தல்

(கொழும்பு)

பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக யப்பான் வெளிவிவகார அமைச்சர் டிரோ அசோ தெரிவித்துள்ளார். யப்பானுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தபோதே யப்பான் வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய ஐ.தே.க.முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஊழல் மற்றும் அடக்குமுறைச் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பு ஹைடபார்க்கில் இவ்வார்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இவ்வார்ப்பாட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவினரும் கலந்து கொள்ளவுள்ளனர். கலைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் விளையாட்டு வீரர்களும் இவ் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

## இ.தொ.காவுடன் மங்கள அணி ஜூலை 5 இல் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளர்களுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர ; பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் மகிந்த அரசாங்கத்தில் உள்ள கட்சிகளை மகிந்தவுக்கு எதிராகத் திருப்பி தம்பக்கம் அவர்களை ஈர்க்கும் நடவடிக்கைகளையும் மங்கள குழுவினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு கட்டமாகவே (06 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் பணிகள் விரைவில் முழுமையாக நடைபெறும்

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தாக்குதல் காரணமாக கடந்த சில மாதங்களாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமது செயற்பாடுகளைப் பெரிதளவில் குறைத்துக் கொண்டிருந்த இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆட்பலத்தை அதிகரிக்க மேலும் பத்துக் கண்காணிப்பாளர்கள் நோர்வே மற்றும் ஐஸ்லாந்து போன்ற நாடுகளில் இருந்து வந்து கொண்டிருப்பதாக அதன் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தமது பணிகளைப் புரிய (06 ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளம் சோதனைச் சாவடி நாளை வரை திறந்திருக்கும்

(கொழும்பு)

மன்னார் மாவட்ட விடுவிக்கப்படாத பிரதேசத்தில் அமைந்துள்ள மடு மாதா தேவாலயத் திருவிழாவை முன்னிட்டு ஜூன் 29 ஆம் திகதி முதல் நாளை வரை உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடி பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பகுதியில் இருதரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி வருவதோடு பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து வருகின்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். (ச-5)

## நோர்வேக் குழு கிளிநொச்சி செல்வதற்கு அரசாங்கம் அனுமதியளிக்கக் கூடாது

### ஜே.வி.பி வலியுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்கம் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கினால் இராணுவத்தினரின் மனநிலை பாதிக்கப்படும் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அவர் கூறியதாவது,

பேச்சுக்களை மீளத் தொடங்கக் கோரும் மேற்குலகின் சதியில் இலங்கை அரசாங்கம் விழுந்துவிடக் கூடாது. கிளிநொச்சிக்கு இணைத்தலைமை நாடுகள் தமது பிரதிநிதியாக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஹான்ஸன் பௌயரை அனுப்புவதற்கு முயற்சித்து வருகின்றன.

அந்த முயற்சிக்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி கொடுக்கக் கூடாது. தற்போதைய நிலையில் புலிகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளனர். அவர்களை மீண்டும் பலமுடைய (06 ஆம் பக்கம் பார்க்க)

## சி.டி.எம்.ஏ.தொலைபேசிச் சேவை யாழில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது


(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ரெலிக்கொமின் சிற்றி லிங் சி.டி.எம்.ஏ.தொலைபேசி இணைப்பு யாழ். மாவட்டத்தில் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதாக சிறிலங்கா ரெலிக்கொமின் வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ்ப்பாணம், சுன்னாகம் மற்றும் நெல்லியடியில் நிறுவப்பட்ட 3 தள வானலைப் பரப்பு நிலையங்களில் (Base Station Transmitters)ஆரம்பிக்கப்பட்டு நேற்றுப் பகல் 11.30 மணியளவில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷிற்கு முதலாவது அழைப்பை மேற்கொண்டு சி.டி.எம்.ஏ.சேவையை (06 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

அதிபர் சேவை தரம் III நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அழைக்கப்பட்ட 526 பேரின்பெயர் விபரங்கள்



சென்னைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் அமெரிக்க அணுசக்திகப்பலானநிமிட்ஸ்சையே படத்தில் காண்கிறீர்கள்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெடி பொருட்களுடன் மீட்கப்பட்ட லொறி உரிமையாளர் இந்தியாவில்!

## குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் குண்டு பொருத்திய லொறி உரிமையாளரை கைது செய்ய இந்தியாவின் உதவியை நாடி இருப்பதாக இலங்கை பாதுகாப்புத்தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் வர்த்தகரான அவர் கிளிநொச்சிக்கு தனது லொறியை அனுப்பியதாகவும் அதன் பின்னரே லொறியில் குண்டு பொருத்தப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் அவரை தேடி கண்டு பிடிக்கும் பொறுப்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் துறையினர் நடத்திய விசாரணைகளில் மேற்படி வர்த்தகர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றமை தெரிய வந்ததாகவும் அதனையடுத்து இந்தியாவுக்கு தப்பிச் சென்ற அவரை கைது செய்வதற்கு இந்தியாவின் உதவியை அரசாங்கம் நாடி இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

லொறியுடன் கைது செய்யப்பட்டவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (எ-1)

# ஐ.தே.க.,சு.க.உறுப்பினர்கள் சிலர் ஜே.வி.பியின் முன்னணியில் இணைய விருப்பம்

ஜே.வி.பி.கட்டியெழுப்பும் புதிய முன்னணியுடன் இணைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தும் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை,பிரதேச சபை உறுப்பினர்களும் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக ஜே.வி.பியின் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் போக்குடன் முரண்பட்டுள்ள இரண்டு அமைச்சர்கள் மற்றும் ஐ.தே.கவின் தலைமை தொடர்பாக அதிருப்தியுற்றுள்ள குழுவினரே இந்த ஜே.வி.பியின் புதிய முன்னணியுடன் இணையவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரை இந்த புதிய முன்னணியில் ஏன் இணைத்துக்கொள்ளவில்லை என்று எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த ஜே.வி.பியின் அரசியல் பிரிவினர் அவர்கள் சமர்ப்பித்த கொள்கைகள் கட்சியுடன் முரண்பட்டதால் கட்சியுடன் சேர்த்துக்கொள்வது தொடர்பாக உறுதியாக தெரிவிக்க முடியாது என கூறியுள்ளனர். (ச-5)

# சமூக பொலிஸ் சேவை தொடர்பான ஆராய்வு

பிரிட்டனில் நடைமுறையில் உள்ள சமூக பொலிஸ் சேவையை கொழும்பிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கென இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் தற்போது பிரிட்டனுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன,பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நாவரத்ன மற்றும் நிமல் அபன்வல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான தயா சமரவீர,ஜயந்த பெரேரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண ஆகியோரே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

பிரிட்டன் மூலம் கிடைத்த புலமைப்பரிசில்களை கொண்டு சமூக பொலிஸ் சேவை தொடர்பாக ஆராய்வதற்காக இந்த பொலிஸ் அதிகாரிகள் மே மாதம் 19 ஆம் திகதி லண்டன் சென்றுள்ளனர்.

இவர்களது முதற்கட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஸ்கொட்லாந்தில் பொலிஸ் பயற்சிக் கல்லூரியில் இடம் பெற்றன. இந்தப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது இவர்கள் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை கண்டறிந்துள்ளனர். (ச-5)

# 'சிவாஜி' உலக சாதனை

(சென்னை)

ரஜனிகாந்த் நடித்த 'சிவாஜி படம்' முதல் 14 நாட்களில் உலக சாதனை நிகழ்த்தி இருக்கிறது. சென்னை நகரில் மட்டும் இந்த படம் பார்த்தவர்கள் எண்ணிக்கை 6 இலட்சத்து 37 ஆயிரத்து 763 பேர்கள் என சென்னை நகர திரையரங்க உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,சென்னை நகரில் மட்டும் சிவாஜி படத்தை முதல் 14 நாட்களில் (15.06.2007 முதல் 28.06. 2007) வரை பார்த்தவர்கள் எண்ணிக்கை 6 இலட்சத்து 37 ஆயிரத்து 763 பேர்கள் ஆகும்.

இதுபோல் சிவாஜி படம் பல முந்திய படங்களின் சாதனைகளை எல்லாம் முறியடித்து முதல் இடத்தில் உள்ளது. சென்னை நகர விநியோக உரிமை மட்டும் 6 1/2 கோடிக்கு விற்கப்பட்ட முதல் திரைப்படம் சிவாஜிதான். சென்னை நகரத்தில் 16 திரையரங்குகளில் திரையிடப்பட்ட முதல் தமிழ்ப்படமும் இதுதான். படம் திரையிடுவதற்கு முன்பே ரிக்கற் முற்பதிவில் மட்டும் ஒரு கோடியே 75 இலட்சத்துக்கு ரிக்கற்றுக்கள் விற்கப்பட்டது இதுவே முதல் முறை.

சிவாஜி இந்தியாவில் மட்டுமல்ல; வெளிநாடுகளிலும் கொடிகட்டி பறக்கிறது. லண்டனில் ஆங்கிலப் படங்களுக்குப் போட்டியாக யூகே டாப் -10 என்ற டாப் வரிசையில் இடம் பெற்றிருக்கிறது. இவை அனைத்தும் சாதனை மட்டுமல்ல சரித்திரமும் ஆகும் என அவர் கூறியுள்ளார். (ச-5)

# அல்லைப்பிட்டி இளைஞனை காணவில்லை என முறையீடு

அல்லைப்பிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க முகாமில் வசித்து வந்த இளைஞன் ஒருவரை காணவில்லையென அவரது தந்தை யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி நாவாந்துறைப் பகுதியில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் பின்பே தனது மகன் காணாமல் போனதாக அவரது தந்தையால் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.நாவாந்துறையைச் சேர்ந்த அருள் நேசன் ஜெஸ்ரின் (வயது 29) என்பவரே காணாமல் போனதாக முறையிடப்பட்டுள்ளது. (ச)

# மாவட்ட செயலக அறிவித்தல்

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அவசர தேவை நிமிர்த்தம் செல்வதற்காக அரசாங்க அதிபரின் சிபார்சினைப் பெற்று இராணுவ பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Clearance)பெற்றுக் கொள் வதற்காக விண்ணப்பித்தவர்கள் அதற்கான இராணுவ பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை இரு தினங்களுக்குள் யாழ்.மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.மேலதிக விபரங்களுக்கு 021 222 2235 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரி மற்றும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று இரத்ததானம் செய்தனர். யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி சிவசங்கர் தலைமையில் இவ் இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது. (ச)



யாழ்.குடாநாட்டில் சி.டி.எம்.ஏ.சேவை ஆரம்ப நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பலாலி இராணுவத்தளத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி சி.டி. எம்.ஏ. தொலைபேசியை சிறிலங்கா ரெலிக்கொமின் வடமாகாண பிரதிப்பொது முகாமையாளர் வி.யோகேந்திரனிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# இராசிபலன்

03.07.2007

(ஆனி 19, செவ்வாய்க்கிழமை)

திருதியை மாலை 6.30 மணிவரை

திருவோணம் முன்னிரவு 07.00 மணிவரை

இராகுகாலம் 02.57-04.27 மணிவரை

சுபநேரம் 10.27-11.57 மணிவரை

| | |
|---|---|
| மேடம்:- | பிறருக்கு உதவுதல்,நல்ல செய்தி, காரிய அனுகூலம்,போசன நன்மை. |
| இடபம்:- | ஆன்றோர் ஆசி,உடல் உழைவு,வீண் பயம்,அஜீரணக்கோளாறு. |
| மிதுனம்:- | உஷ்ண வியாதி, கலகம், போசன நன்மை, வேலைச்சுமை. |
| கடகம்:- | கலந்துரையாடல்,குடும்ப நன்மை,பண வருவாய்,காரிய அனுகூலம். |
| சிங்கம்:- | திடீர் பயணம்,ஆரோக்கிய நிலை, தொழில் விருத்தி,பொருள்சேர்க்கை. |
| கன்னி:- | எடுத்த கருமங்கள் தாமதமாகும், மனச் சஞ்சலம்,சிறுவியாதி,பூர்வ புண்ணிய கருமம். |
| துலாம்:- | கல்வியில் ஆர்வம்,அற்பர் உறவு, பயந்த சுபாவம்,வாகன சுகம். |
| விருச்சிகம்:- | இனிய சம்பவம்,சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |
| தனுசு:- | கௌரவக்குறைவு,முயற்சி தாமதம், பண விரயம்,[illegible] வார்த்தை. |
| மகரம்:- | நண்பர்களை சந்திப்பு,ஆழ்ந்த சிந்தை, புதிய விடயம்,தேக நலம். |
| கும்பம்:- | பிதா சிந்தை,காரிய அலைச்சல்,சுப செலவு, மனக்கிலேசம். |
| மீனம்:- | தொழில் சிந்தை, பெருமையடைதல், காரிய அனுகூலம்,தன வருவாய். |

—[illegible]வன்

# வலிகாமம் மேற்கில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்

மாதகல் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, மாவடி, வடக்கம்பிராய் உட்பட்ட சுமார் மூன்று கிலோ மீற்றருக்கு மேற்பட்ட பகுதியை இரா ணுவத்தினர் நேற்று சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டனர்.

நள்ளிரவு முதல் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு குறிப்பிட்ட பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக நேற்று அப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பொதுமக்களும் வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டன. மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்களும் பெரும் பாதிப்பிற்குள்ளாகினார்கள்.நேற்று நண்பகல் வரை இந்த தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றது. (எ-5)

# 327 மாணவர்கள் மகாபொலவுக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

2005/2006 ஆம் கல்வி ஆண்டுக்கான மகாபொல புலமைப்பரிசில் பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் சார்பில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜா சிறப்புரை நிகழ்த்தினார்.

பல்கலைக்கழக பீடாதிபதிகள்,பதிவாளர், விரிவுரையாளர்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவன பதிவாளர்,திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் வைபவத்திற்கு மகாபொல புலமைப்பரிசில்களுக்கு தகுதிபெற்ற 327 மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 221 மாணவர்களில் 174 மாணவர்களும் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த 106 மாணவர்களில் 86 மாணவர்களுமாக 260 மாணவர்கள் புலமைப்பரிசில் சான்றிதழைப் பெற்றுள்ளார்கள்.

இதேவேளை 2005/2006 கல்வி ஆண்டுக்கான மகாபொல சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக நேரில் சமுகமளித்து யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கண்காணிப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நாளை காலை 9.30 மணிக்கு மேற்படி கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ச)

# உணவுப் பொருள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் ப.நோ.கூ.சங்கத் தலைவர்,பொது முகாமையாளர்கள்,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், நுகர்வோர் பாதுகாப்புச் சபை உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

றுகுணு IV கப்பலில் பெறப்பட்ட பொருட்களின் 50 வீத கொடுப்பனவுக்குரிய காசோலையையும் நிலுவையாகவுள்ள தொகைக்குரிய காசோலையையும் மேற்படி கலந்துரையாடலுக்கு முன்னதாக கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# அதிபர் சேவை தரம் III நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

இலங்கை அதிபர் சேவை தரம் IIIற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து 12 தினங்கள் யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அழைக்கப்பட்ட 526 பேரின் பெயர் விபரங்களை வடமாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இதேவேளை இந் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப் பெறாதோர் வலம்புரியில் இன்று வெளியாகும் பெயர்ப் பட்டியலில் தமது பெயர் இருப்பின் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

ஆர்.எவ். ரட்ணம்-யாழ்ப்பாணம், பி.என். சுதர்சன்- யாழ்ப்பாணம், ரி.சண்முகலிங்கம்- திருநெல்வேலி, ஏ.சாந்தகுமார் - காரைநகர், ரி.கனகசபை- காரைநகர் ,என். சிவகுமார் -யாழ்ப்பாணம் , ஆர். ஜெயக்குமார் - யாழ்ப்பாணம் ,கே. நவரட்ணம்- தெல்லிப்பளை, ஆர். ராஜ்கரன்-கொக்குவில், ரி.ரகுலேசன் - யாழ்ப்பாணம்.

ஆர்.தயாபரன் -சாவகச்சேரி, பி. கமலதாசன்- யாழ்ப்பாணம் ,கே. பாலமுருகன்- சுழிபுரம், எம் . சிவானந்தம்- நீர்வேலி, ஜெ.தவசீலன்- யாழ்ப்பாணம் , கே.தவசீலன்- யாழ்ப்பாணம் .

வி.ஈ.பிறெசிலி- ஆனைக்கோட்டை, எஸ.தயானந்தன்- யாழ்ப்பாணம் ,ரி. திலீபா- யாழ்ப்பாணம், வி.கதிரேசபிள்ளை- யாழ்ப்பாணம்,கே. சுகேந்திரன் -கொக்குவில், ரி.தனேந்திரன் -யாழ்ப்பாணம், எ.எஸ்.கோபிநாத் -கரவெட்டி, எ.விமலராஜா -வல்வெட்டித்துறை.

யு.மாதினி -இணுவில், வி.உதயகுமார் -சுன்னாகம், ஈ.ராகவன்- கரவெட்டி, கே.கிஷ்ணகரன் -கரவெட்டி, எஸ்.ரமேஸ் -மானிப்பாய், கே.சிறிநந்தகோபன் -மானிப்பாய், ஜி.சரவணேஸ்வரன் -அச்சுவேலி.

எஸ்.சிவரூபினி -கரவெட்டி, பி.ஜெயகௌரி- யாழ்ப்பாணம், ஜி.செல்வராஜா -கொக்குவில், எஸ்.சத்தியவரதன்- கோப்பாய்,கே. அற்புதராஜா- கொக்குவில்,எஸ்.உதயகுமார் -பருத்தித்துறை, கே.குகதாசன்- சுழிபுரம், ரி.தயானந்தன் -மல்லாகம், எஸ்.கிருபானந்தன் -வரணி.

பி.திருக்குமார்- கொடிகாமம், ரி.சிறிமுரளி- யாழ்ப்பாணம்,எஸ்.தர்மலிங்கம்-எழுதுமட்டுவாள், கே.ராஜதுரை- உடுப்பிட்டி, கே.நவநீதன்- தொண்டைமானாறு, கே. யோகராஜா- உடுப்பிட்டி, ஆர்.சிறிநடராஜா- உடுப்பிட்டி.

கே.ரவீந்திரன் -தொண்டைமானாறு, ஈ.ஏ.செல்வதயாளன்- யாழ்ப்பாணம்,எஸ். சிறிதரன்- சுன்னாகம், என்.ரவீந்திரன்- இணுவில் ,எஸ். சிவசோதிநாதன்-இணுவில், பி.கலையரசன்- இணுவில், கே.ஆனந்தரத்தினம் -யாழ்ப்பாணம் .

வி.செல்வநாயகம்- சுன்னாகம், ஏ.அன்பரசி- சாவகச்சேரி, கே. ரவீந்திரா- மீசாலை, ரி. அருள்மொழி -கோண்டாவில், எஸ்.சண்முகலிங்கம்- கல்வியங்காடு, எஸ்.பிரபாகரன்- காரைநகர், யு.மாலினி- சுன்னாகம்.

எஸ்.சதீஸ்வரி -யாழ்ப்பாணம், எஸ்.தேவகரன்- இணுவில், எஸ்.பத்மராணி சுன்னாகம், ஆர். ஜெயசீலன்- ஆனைக் கோட்டை, வி.மரியசெல்வன்- நீர்வேலி, எஸ்.தனஞ்சயன்- சுன்னாகம்,ஜெ.கங்காதரன்- சுன்னாகம், ஈ.தியானமுத்து- யாழ்ப்பாணம்,பி.குமாரவேல்- சுன்னாகம், பி.வசந்தன்- யாழ்ப்பாணம்,ஆர் .வனிதா -சண்டிலிப்பாய்.

ஆர்.ராஜதுரை- ஆனைக்கோட்டை ,ரி. உதயநாதன்- அச்சுவேலி,எம்.சுவேந்திரதேவி- அச்சுவேலி, எம்.மகேந்திரராஜா- அச்சுவேலி, ஈ.ஜெ.புத்திசிகாமணி -யாழ்ப்பாணம், ஜி.அன்ரன்பிறேமதாஸ்- உரும்பிராய், ரி.கவிதா-யாழ்ப்பாணம், ரி.தியாகேஸ்வரி- நல்லூர், ஜெ.தர்மராஜா- வட்டுக்கோட்டை, எஸ்.வாசுகி- யாழ்ப்பாணம், எஸ்.தேவகுமார் -யாழ்ப்பாணம்.

பி.நடேசலிங்கம் -மிருசுவில், கே.சத்தியசீலன்- சாவகச்சேரி, ரி.தீபன்- சண்டிலிப்பாய்,வி.சியாமளா- மல்லாகம், எம்.கதிர்காமலிங்கம்- வல்வெட்டித்துறை, ஆர். சிவகுமார் -கோண்டாவில் மேற்கு, கே.வசந்தா- கரவெட்டி , பி.சிவகுமார்-யாழ்ப்பாணம்,என்.சுகுமார் -யாழ்ப்பாணம் ,கே. சுமதி -நீர்வேலி, வி.ஜனார்த்தனகுமாரி- யாழ்ப்பாணம்.

ரி.சந்திரகுமார்- ஆனைக்கோட்டை, எஸ்.சிவகாந்தன்- யாழ்ப்பாணம்,கே.சிறிதரன் யாழ்ப்பாணம்,கே.தவகீஸ்வரன்- யாழ்ப்பாணம்,கே.தனகுமார் -யாழ்ப்பாணம்,கே.சண்முகம்பிள்ளை- வேலணை, பி தனபாலசிங்கம்- யாழ்ப்பாணம், வி.சிவகுமாரன்-பண்டத்தரிப்பு, என். சிவசுப்பிரமணியம் -யாழ்ப்பாணம், ஜி.பரந்தாமன் -திருநெல்வேலி, கே.பாமினி- கரவெட்டி, எஸ்.பத்மராஜா- யாழ்ப்பாணம், பி.உமாதேவி- யாழ்ப்பாணம், ரி.லோகராஜா -சுன்னாகம் ,ரி.ராஜரட்ணம்- சுன்னாகம் ,வி.புவனேந்திரராஜா- தாளையடி, கே.தர்மசீலன்-கோப்பாய், எஸ்.கோடீஸ்வரன்- கொடிகாமம்.

எஸ்.பரம்தில்லைராஜன்- மிருசுவில், வி.சந்திரதேவன்- சாவகச்சேரி, கே.நித்தியானந்தம் -சாவகச்சேரி, கே. முதலிக்குட்டி -வரணி, எஸ்.கிருஷ்ணன்- சாவகச்சேரி , எஸ்.லக்குமிகரன்- கைதடி, எஸ்.நடராஜகுமார்- கைதடி, கே.கெங்காதரன்- சாவகச்சேரி, ஏ.குகன்-யாழ்ப்பாணம், எஸ்.பரமேஸ்வரன்- யாழ்ப்பாணம், கே.உதயசந்தீர்- மீசாலை, என். ஜெயரூபன்- கைதடி, எ.மனோரஞ்சிதன்- வரணி, ஆர் .வசந்தகுமார் -மானிப்பாய், வி.ஜெயக்குமார் -யாழ்ப்பாணம், என். சந்திரகுமார்- ஆனைக்கோட்டை, பி.பொன்னம்பலம் -பருத்தித்துறை, வி.ஜெயக்குமார்- அல்வாய், .வி. நின்மதிராசா- தாளையடி, ஐ.அருணகிரிநாதன் -கரவெட்டி, ஜெ.தவேஸ்வரன்- சாவகச்சேரி, எஸ். சிறிராமச்சந்திரன்- தாளையடி, எஸ்.ஜெயந்திரன்- தாளையடி, இ.சதாசிவம்- குடத்தனை, ஜி.முருகதாஸ்- மானிப்பாய், ஆர்.ரூபி-சுன்னாகம், கே.கரிகரசக்தி- சுழிபுரம், வி.தியாகராஜா- கோண்டாவில், என்.சிவலிங்கம்- புலோலி, எஸ்.துரைராஜா- பருத்தித்துறை, ஆர்.சிறிதேவி- பருத்தித்துறை , கே.கஜேந்திரன் -கொடிகாமம்.

எஸ்.நாகேஸ்வரி- கோண்டாவில், வி.மகேந்திரகுமார்- கொடிகாமம், ஆர். சண்முகசுந்தரம்- புலோலி, எம்.மகேந்திரராஜா- அல்வாய், எம். தேவரட்ணம்- பருத்தித்துறை, எஸ்.யாதவநாதன்- பருத்தித்துறை, என்.ராசலிங்கம்- புலோலி, எஸ்.வாகீசன்- கோப்பாய், பி.சிவசுப்பிரமணியம்- பருத்தித்துறை,எஸ். தயாளன்- யாழ்ப்பாணம், எவ். ரி.எடிசன்- யாழ்ப்பாணம், என்.சாந்தி-யாழ்ப்பாணம்.

வி.உதயசேகர்- கரவெட்டி, எம். மங்களவதனி- யாழ்ப்பாணம், வி.சிறிகணேஸ்- யாழ்ப்பாணம், என். சபாரத்தினசிங்கி - வட்டுக்கோட்டை, வி.பாலகணேசன்- யாழ்ப்பாணம்,எஸ்.பாலச்சந்திரன்- கொக்குவில் மேற்கு, பி.கேமநந்தினி- யாழ்ப்பாணம்,எஸ்.நகுலேஸ்வரன்- சாவகச்சேரி, ஜி.நகுலராஜா- வட்டுக்கோட்டை,கே. மகேந்திரன்- யாழ்ப்பாணம்.

கே.கே. கனகரத்தினம்- அச்சுவேலி, ரி.சுயந்தினி-யாழ்ப்பாணம்,எம்.விக்னேஸ்வரன்- யாழ்ப்பாணம், எஸ்.மோகனராஜன்-அச்சுவேலி, ரி. பாலகுமார்- கரவெட்டி, என்.குமாரசிறி- கோப்பாய் மத்தி, வி.சோதிலிங்கம்- கோப்பாய், எஸ்.கோணேஸ்வரன்-வரணி, எ.அடைக்கலமேரி- கரவெட்டி, ஜி.மகேஸ்வரி- கரவெட்டி .

எஸ்.எஸ்.செல்வராணி- சங்கானை, என்.பவான்- சுன்னாகம், என்.சூரியகுமார்- சுழிபுரம், வி.பாலகுமார்- மானிப்பாய் ,ரி.கிரிதரன்- உடுவில், எஸ். திரிகரன்- நீர்வேலி, என்.திருக்குமாரன்- சித்தங்கேணி, எஸ்.கிரிதகரன்- கோப்பாய், எ.ஆர்.ஈ.தவேந்திரன்- கரவெட்டி, ஆர்.சாந்தி- யாழ்ப்பாணம், ஏ.நவரட்ணராஜா- மல்லாகம், கே.சிறிகந்தவேள்- இணுவில், வி. தர்மசீலன்- அளவெட்டி, எஸ்.பாஸ்கரன்- சுன்னாகம்,

ரி.சத்தியதாசன் -கொக்குவில் , விக்னேஸ்வரமூர்த்தி- வட்டுக்கோட்டை, எஸ்.வசந்தன் -வட்டுக்கோட்டை, ஆர்.ராஜசீலன்- அல்வாய், எஸ்.நரேந்திரன்- பருத்தித்துறை, ஆர்.கிருஷ்ணானந்தன்- யாழ்ப்பாணம், வி.கே.ஜெகதீசன்-சங்கானை, வி.விமலன்-சுழிபுரம், கே.இந்திரராஜா- கைதடி, கே. தேவன்- யாழ்ப்பாணம்,எ.சிவபாதம் - யாழ்ப்பாணம், எஸ்.தர்மரட்ணம்-நீர்வேலி.

எஸ்.உமாசுதன் - யாழ்ப்பாணம்,எ. பாஸ்கரன்- சுழிபுரம், பி.குலசிங்கம்- சுன்னாகம், எஸ்.உதயகுமார்- யாழ்ப்பாணம்,கே.சிவஞானம்- யாழ்ப்பாணம்,எஸ்.லிங்கேஸ்வரன்- யாழ்ப்பாணம், கே.சிவசுப்பிரமணியம்- நாகர்கோவில் , கே.எழிலழகன் -மிருசுவில். வி.ரவீந்திரகுமார் -அனலைதீவு, ஏ. திருமுருகன்- சுன்னாகம், ரி. இளம்குமரன்- வரணி, எம்.ரவீந்திரன்- பருத்தித்துறை.

யு.முரளி -பருத்தித்துறை, கேதீஸ்வரநாதன்- அனலைதீவு, எஸ்.கனகசபாபதி- புத்தூர் , ஜெ.திருமூர்த்தி- சுழிபுரம், வி.இந்திரலிங்கம்- முள்ளியான், ஏ. திருநாவுக்கரசு- யாழ்ப்பாணம்,கே. பிரதீபா- மல்லாகம், ஆர் .ரவிச்சந்திரன்- யாழ்ப்பாணம்,எஸ்.புஸ்பவதி- கொக்குவில், எஸ்.விஜிதா- கொக்குவில், ரி.கோபாலகிருஷ்ணன்- சாவகச்சேரி, ராதாகிருஷ்ணமூர்த்தி -புத்தூர்,எம்.மல்லிகாதேவி- யாழ்ப்பாணம், எஸ்.ஜெயந்தி- சுண்டுக்குளி, பி.சிவராஜசேகரம்- கொக்குவில்.

எ.சொர்ணலிங்கம்- சுன்னாகம், எஸ்.புஸ்பகரன்- கரவெட்டி, எஸ்.மதியழகன்- நயினாதீவு, ஜி.பரமேஸ்வரன்- பருத்தித்துறை, எம்.எம்.பாலசிங்கம்- யாழ்ப்பாணம், ரி. ரவீந்திரநாதன்- யாழ்ப்பாணம், எஸ்.தர்மகுலசிங்கம்- யாழ்ப்பாணம், எஸ்.கோணேஸ்வரி- யாழ்ப்பாணம், எஸ்.தயாபரன்- மீசாலை, எம்.எ.மேரிறீற்றா - யாழ்ப்பாணம்.

ஜி.சிறிகணேஸ்- கொக்குவில், பி.செல்வ விநாயகம்- பருத்தித்துறை, எல்.கவிதா- அச்சுவேலி, ஆர்.புஸ்பலாதேவி - யாழ்ப்பாணம்,என்.தயாளன்- கொக்குவில், வி.ரட்ணபாலன்- கோப்பாய், என்.வசந்தரூபன்- மீசாலை , கே.சோதிராசன்- யாழ்ப்பாணம், எஸ்.ரகுபதி- யாழ்ப்பாணம்,கே. பகீரதன்- யாழ்ப்பாணம்,பி.தயாளன் - யாழ்ப்பாணம்.

எஸ்.ஜெயசோதிவரதன்- இணுவில், பி.தயானந்தன்- மானிப்பாய், கே. பிறேமதாசன் -மானிப்பாய், எம்.பரமேஸ்வரன் -பருத்தித்துறை, கே.கண்ணதாசன் - சுழிபுரம், கே. லோகநாதன்- வட்டுக்கோட்டை, எஸ்.எ.அனுரா- வட்டுக்கோட்டை, எஸ்.பேரின்பநாதன்- யாழ்ப்பாணம், எம்.மகாலெட்சுமி- யாழ்ப்பாணம்,பி.கௌரியம்பாள்- காரைநகர், பி.வரதகுலசிங்கம்- அச்சுவேலி, கே.கங்கேஸ்வரன்- கரவெட்டி, கே. விநாயகமூர்த்தி - யாழ்ப்பாணம், சி.எவ்.சேவியர் - யாழ்ப் பாணம் , ரி.ஐ.ரங்கநாயகம்- யாழ்ப்பாணம், ஆர் .கோகுலரங்கன்- யாழ்ப்பாணம், ஏ.நளினி- கொக்குவில், என்.ஜனககுமார்- சாவகச்சேரி, என்.குமாரகுருபரன் -கந்தர்மடம், ஆர் .சிறிதரன்- புலோலி, எஸ்.யோகீஸ்வரலிங்கம் - இணுவில், ஆர் . லோகேஸ்வரன்- நீர்வேலி, ஆர் .வசந்தி- யாழ்ப்பாணம்.

பி.அமர்தலிங்கம்-இணுவில், என்.கே.குகநேசன்- உரும்பிராய், ஆர் .லோகேஸ்வரன்- சுழிபுரம், ஜி.பத்மநாதன்- நெடுந்தீவு, கே.ரி.வரதராஜா- சுன்னாகம், எஸ்.குலேந்திரராஜா- பண்டத்தரிப்பு, வி.சிவசக்திவேல்- சண்டிலிப்பாய், பி.ஜெ.நிர்மலன்- மானிப்பாய், கே.சுப்பிரமணியம்-அல்வாய் ,எஸ்.மனோன்மணி- பண்டத்தரிப்பு, எஸ்.சிறிகுமரன்- சுன்னாகம், எஸ்.திருக்கேஸ்வரன்- பண்டத்தரிப்பு, வி.சிறிமதி -சாவகச்சேரி, ரி.பாலசுப்பிரமணியம்- கைதடி, எஸ்.பரமேஸ்வரன்-சுன்னாகம்.

கே. திலீபன் -யாழ்ப்பாணம், எஸ்.இளங்கோ- யாழ்ப்பாணம், பி.இந்திரன்- கொக்குவில், எஸ்.உதயகுமார்- யாழ்ப்பாணம்,பிறேமதாஸ் குமரசிறி - காரைநகர், ரி.கடம்பநாதன்- சித்தங்கேணி, எஸ்.யோகேந்திரன் -கரவெட்டி, ரி.சிவானந்தன்- யாழ்ப்பாணம்.

எம்.சிவபாலசற்குணம்- வரணி, எஸ்.குணானந்தசுதன்- யாழ்ப்பாணம், பி.ரங்கநாதன்- மானிப்பாய், கே.ஆனந்தகணேஸ்- பருத்தித்துறை, எஸ்.சத்தியபவானி- யாழ்ப்பாணம்,கே. ராஜேந்திரன் -யாழ்ப்பாணம், ரி.சிவபாலன் - யாழ்ப்பாணம், எஸ்.சூரியராஜா- சுன்னாகம், எம்.குணபாலன்- பண்டத்தரிப்பு.

பி.பராசக்தி - யாழ்ப்பாணம்,ஐ.தயாபரன்- யாழ்ப்பாணம்,ஜெ.டெனிசியஸ்- யாழ்ப்பாணம், எஸ்.சிறிஸ்கந்தராஜா- யாழ்ப்பாணம்,எம்.ஜீவநிதி- யாழ்ப்பாணம், பி. உதயராசா- யாழ்ப்பாணம், எ.சூரியவதனி-யாழ்ப்பாணம்,வி.தற்பரன்- நல்லூர், ரி.தவநேசன்- மீசாலை, எஸ்.சிவானந்தவல்லி- யாழ்ப்பாணம், எஸ்.பிறேமரஞ்சித்- வல்வெட்டித்துறை, கே. அசோக்குமார்- கோப்பாய், ரி.சுகுமாரன்- மானிப்பாய், வி.அருள்ராஜ் - அளவெட்டி, சி.பஞ்சநாதன்- சங்கானை,ரி.பொன்னம்பலம்- சுன்னாகம், கே. ரவிச்சந்திரன் - யாழ்ப்பாணம்.

வி.மகேந்திரராஜா -கொக்குவில், என்.கருணாகரன்- மீசாலை, எ.பாஸ்கரன்- கரவெட்டி, எஸ்.சிவகணேசன்- கரவெட்டி, எம்.சத்தியகுமார் - யாழ்ப்பாணம்,எ.தங்கரூபன்- உடுப்பிட்டி, எஸ்.ராமநாதன் -கரவெட்டி, கே.மகேஸ்வரன்- யாழ்ப்பாணம்,எஸ்.யோகலிங்கம்- கரவெட்டி, பி.கிருஷ்ணகுமார்- கரவெட்டி, வி.கே. ரவீந்திரராஜா- நயினாதீவு, வி.போல்கமல்ராஜ்- உரும்பிராய், எம். மகேந்திரன்- சுன்னாகம் , பி.ரகுமார்- யாழ்ப்பாணம்,எஸ்.தயாபரன்- சாவகச்சேரி,வி.அகிலன் - பருத்தித்துறை, கே. கணேசராசா- நீர்வேலி, ரி. சர்வேஸ்வரன்- யாழ்ப்பாணம், எஸ்.ரி.சிவஞானம்- மானிப்பாய்,கே. தர்மலிங்கம் -அல்வாய்.

ஈ.எல்.புவிராஜசிங்கம்-யாழ்ப்பாணம்,என். பரமேஸ்வரன் -இளவாலை, பி.வாசுகி -உடுவில், ஜே.ஸ்ரீபன் - யாழ்ப்பாணம், எம்.மாலினி- யாழ்ப்பாணம்,கே.என் .நரேந்திரன்- கொக்குவில், எம்.சிறிபாஸ்கரன் - சாவகச்சேரி, ஜி.உதயரூபன்- வல்வெட்டித்துறை, வி.செல்வராணி -கொடிகாமம்.

கே.கிருஷ்ணமூர்த்திஜயர்-சாவகச்சேரி, எஸ்.இளங்கோ- யாழ்ப்பாணம்,கே. கணேஷ்வரன்- நயினாதீவு,வை.ஜெகானந்தம்- கோப்பாய், எஸ்.கணேசானந்தன்- நீர்வேலி, எஸ்.சிவலோகநாதன்- சங்கானை, ஆர்.செல்வநாயகம்- நாகர்கோவில், எம்.சிவதாசன்- கொக்குவில், எஸ்.மகேஸ்வரன்- அல்வாய்.

பி.சற்குணராஜா- ஊர்காவற்றுறை, கே.குமரபரன் - யாழ்ப்பாணம்,கே.அரசேஸ்வரன்- யாழ்ப்பாணம், எஸ்.ரூபசிங்கம்- யாழ்ப்பாணம், கே. வாகீசன்- கோப்பாய், ரி.கேதீஸ்வரன்- புத்தூர், எஸ்.லலீசன்- அச்சுவேலி, எஸ்.மனோகரன்- சண்டிலிப்பாய், ரி.புவனேந்திரன்-கரவெட்டி, கே.கேதீஸ்வரன்- புத்தூர்,கே. ஆனந்தி- யாழ்ப்பாணம்,கே. கிரிதரன்- உடுப்பிட்டி, கே. ரஜனி- வல்வெட்டித்துறை, ஏ. பவளம் - யாழ்ப்பாணம்.

எஸ்.கமலாதேவி -ஆனைக்கோட்டை, ரி.ராஜேஸ்கரன் -வல்வெட்டித்துறை, எஸ்.ராஜன்- யாழ்ப்பாணம்,பி.சிவலோகநாதன்- வட்டுக்கோட்டை, எஸ்.கிருபானந்தன் -கைதடி, எஸ்.சுவேந்தன் பருத்தித்துறை, பி.பிறேமாவதி- யாழ்ப்பாணம், எஸ்.தியாகலிங்கம்- யாழ்ப்பாணம், எஸ்.கிருபாகரன்- யாழ்ப்பாணம்,எஸ்.சிவகுமாரன்- தெல்லிப்பளை, கே. கீதாமணி -உடுப்பிட்டி, வி.ஈ.கஸ்ரன்றோய் -யாழ்ப்பாணம். ஜே.கஸ்ரன்றோய் - யாழ்ப்பாணம், எஸ்.சிறிரங்கன்- கொடிகாமம், கே. விஜயகுமார்- நீர்வேலி, ஆர் .பரமேஸ்வரி-யாழ்ப்பாணம், பி.தியாகராஜா- கோண்டாவில், எஸ்.சிவசக்திதேவி- சண்டிலிப்பாய் , என்.கேதீஸ்வரன்- அளவெட்டி, ஆர்.பசுபதீஸ்வரன் -யாழ்ப்பாணம், எம்.நகுலேஸ்வரன் -மானிப்பாய் ,என்.சுகுமாரன்- மானிப்பாய்,எஸ்.தேவகுமார் -புலோலி ,எ. சறோஜினிதேவி- கரவெட்டி, எம். சண்முகலிங்கம்- புலோலி, எஸ்.சிவமலர்-யாழ்ப்பாணம், கே. சிவகுமாரன்- பண்டத்தரிப்பு, என்.கனகசுந்தரன்- வட்டுக்கோட்டை, என்.பத்மராஜா- கொக்குவில், எஸ்.கிருஷ்ணானந்தி -சுன்னாகம்.

எஸ்.ரவிச்சந்திரன்- யாழ்ப்பாணம்,எஸ்.ரவிச்சந்திரன் -யாழ்ப்பாணம்,என் சக்திவேல்- யாழ்ப்பாணம், கே.சிவன்அருள்சோதி- கோண்டாவில்,பி.சுதானந்தராஜா-யாழ்ப்பாணம் , ஏ. மனோகரன்- வல்வெட்டித்துறை, ஜெ.தர்மஜீலன்- கோப்பாய், ஐ.சற்குணராஜா-யாழ்ப்பாணம், ஆர்.ராஜமனோகரன்- மீசாலை, கே. ரவீந்திரன்- கரவெட்டி, பி.சந்திரராஜா- காரைநகர் .

ஜி.சறோஜினி-யாழ்ப்பாணம், ஆர் .நாகேஸ்வரன்- யாழ்ப்பாணம், கே. கந்தசாமி- கொடிகாமம், ஆர் .தயானந்தன் -மல்லாகம், இ.ஆர். ஜெ.ஜெயந்தன் -பண்டத்தரிப்பு, ரி. சிவகுமாரன் - யாழ்ப்பாணம், எஸ்.ரி. கிலீவ்லெண்ட்- யாழ்ப்பாணம், எம்.ரவீந்திரன்- மானிப்பாய் , ரி.தங்கராஜா - அளவெட்டி, வி.தேவபாலன் -கோப்பாய்.

கே. சிவகுமார்- சுன்னாகம், வி.திருமுருகராஜன்- சுன்னாகம், வி.சோதிலிங்கம்- சுன்னாகம், ஆர்.உதயரட்ணம்- யாழ்ப்பாணம் ,பி.மனோகரன்- கோப்பாய், ரி.குகதாசன்- யாழ்ப்பாணம், எஸ்.பாரதி- சுன்னாகம்,பி.லோறன்ஸ்- உரும்பிராய், எஸ்.கணேசலிங்கம் -பருத்தித்துறை, எஸ்.கணேசதாஸ் -பருத்தித்துறை,கே.சீராளன்- இணுவில் ,பி.மனோகரன் - கோப்பாய்.

எ.லீலாவதி -தெல்லிப்பளை , பி.கிருஷ்ணமணி- வட்டுக்கோட்டை, எஸ்.சபாநாதன்- சுன்னாகம், வி.கிருஷ்ணஜோதி- பருத்தித்துறை, கே. தனபாலசிங்கம் -கொக்குவில், எம்.மைதிலி- ஆனைக்கோட்டை, எஸ்.பரமேஸ்வரன்- கொக்குவில், எஸ்.மணிவர்ணன்- கரவெட்டி, எஸ்.காசிவிஸ்வநாதன்-கரவெட்டி, யு.பேரானந்தம் -யாழ்ப்பாணம், ஆர்.தம்பானந்தன்- இணுவில், வி.சாந்தினி- அச்சுவேலி, எஸ்.விவேகானந்தன் -கோப்பாய், இ.துளசிதரன் - உரும்பிராய்.

என்.தவேந்திரராஜா -சுன்னாகம், ரி.பாலபவன்- புத்தூர் ,ரி.ஜெயபாலன்- சுன்னாகம்,வி.குணசீலன்- நீர்வேலி, எஸ்.சிவகுமார் -சுழிபுரம், ஜி.விமலன் - யாழ்ப்பாணம்,எஸ்.நாகராஜா -சண்டிலிப்பாய், பி.சிவசித்திரா- யாழ்ப்பாணம், எ.பிறேமநிதி- மானிப்பாய், சத்தியமூர்த்தி- மல்லாகம், எஸ்.சிறிலவன்- அளவெட்டி, எம்.கௌரி- கைதடி, எம்.குமுதினி- கைதடி- எஸ்.செல்வரஞ்சன் -கோண்டாவில், வி.சுதர்சன்- அளவெட்டி, எம். முருகவேள்- இணுவில், எஸ்.பாலச்சந்திரன்- பருத்தித்துறை, கே. ராஜேஸ்வரி- புலோலி, எஸ்.கிருபாகரன்- உரும்பிராய், எஸ்.நடராஜா- பண்டத்தரிப்பு, ஐ.தேவசஸ்வரன்- மிருசுவில், எஸ்.சிவலிங்கராஜா- கரவெட்டி, எஸ்.ஆனந்தமூர்த்தி- நாகர்கோவில், என்.தேவராஜா- அல்வாய், எ.எஸ்.சாள்ஸ்- யாழ்ப்பாணம்.

எஸ்.விஜயகுமாரன் - கரவெட்டி , எஸ்.நிமலன்- கோண்டாவில்,எஸ்.பாலராணி- கரவெட்டி, எஸ்.மதிபாலன் -யாழ்ப்பாணம், வி.பிறேமதாஸ்- சங்கானை, ஆர். சுமத்திராதேவி- காரைநகர் , ரி.ஜெகதீஸ்வரன்- இணுவில், சீ.என்.விக்னேஸ்வரன்- யாழ்ப்பாணம், ஜெ.சிறிஸ்கந்தராஜா -ஊர்காவற்றுறை,எம்.பிரசாந்தன்-யாழ்ப்பாணம், எஸ்.ஸ்கந்தகுமார்- சுன்னாகம்,எஸ்.சிவனாந்ததேவி -கைதடி.

ஜி.தில்லைரஞ்சனி- யாழ்ப்பாணம், எஸ்.வனஜா- யாழ்ப்பாணம்,ஆர்.றஜனி- யாழ்ப்பாணம், எஸ்.வசந்தாதேவி- அச்சுவேலி , எஸ்.செல்வ மணி- அச்சுவேலி,என்.கணேசமூர்த்தி-காரைநகர் ,பி.ஜெயகாந்தன்- கரவெட்டி, வி.சிவலீலாதேவி- புத்தூர், எஸ்.கேசவன்- வட்டுக்கோட்டை, எஸ்.சிவமலர்- சுழிபுரம்.

கே.சுலபமதி -சுழிபுரம், வி.சண்முகம் -புத்தூர், பி.புஸ்பராணி- யாழ்ப்பாணம், எஸ்.புவனேஸ்வரன்- யாழ்ப்பாணம்,எ.ஜெகதீஸ்வரன்- காரைநகர், வணக்கத்துக்குரிய எஸ்.ஆர் எம்.இளைனி- யாழ்ப்பாணம், பி.சாந்தலெட்சுமி- யாழ்ப்பாணம், எஸ்.நிர்கேஸ்வரி- காரைநகர், எ.விமலேந்திரன் - அல்வாய், வி.ஞானசக்தி- சாவகச்சேரி, எம்.மகாகேதீஸ்வரன்- கரவெட்டி, எஸ்.செல்வராணி - காரைநகர் ,கே. கதிரேசபிள்ளை- யாழ்ப்பாணம், பி.டபிள்யு. நவராஜா- யாழ்ப்பாணம்.

எஸ்.சூரியகுமார்- ஆனைக்கோட்டை , டி.சதீஸ்கரன் - மீசாலை,ஜெ.ஜி.ஜெயபாலன்- பண்டத்தரிப்பு, எஸ்.ஆர்.பி.பி.நேசமலர்- மாதகல், வணக்கத்துக்குரிய எஸ்.ஆர்.சிறியபுஸ்பம்- யாழ்ப்பாணம், என்.மைதிலி-யாழ்ப்பாணம், எ.ஆர்.யோசப்- யாழ்ப்பாணம்,கே.பொன்னுத்துரை -எழுதுமட்டுவாள், கே. அருந்தவராஜா -சாவகச்சேரி, கே. குகதாசன்- மீசாலை ஜி.வளர்மதி- எழுதுமட்டுவாள், எஸ். பிரணவநாதன் - யாழ்ப்பாணம், பி.கஜபதி- மல்லாகம்.

(அ)

# நாரிப்பிடிப்பு - இடைத்தட்டம் விலகல்

கேள்வி:- எனது வயது 60. ஆறு பிள்ளைகளின் தாயார். எனக்கு சென்ற சில வருடங்களாக அடிக்கடி நாரிப்பிடிப்பு வருகிறது. முன்பு எப்பொழுதாவது ஒரு தடவைதான் வரும். இப்பொழுது அடிக்கடி வருகிறது. முன்பு ஒரு தடவை எனது டாக்டர் எழுதித் தந்த மஞ்சள் நிறக் கூட்டுக்குளிசையைத்தான் வலி வரும்போது உபயோகிக்கிறேன். குளிசையைப் பாவித்தால் விரைவில் குணமாகிவிடும். ஆனால் மீண்டும் வருகிறது. இம்முறை நாரி உளைவுடன் இடது காலும் வலிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம் என ஆலோசனை கூறுங்கள். எனக்கு மாத்திரமன்றி, எமது பகுதியில் உள்ள வேறு பல பெண்களும் இத்தகைய நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இதனைத் தடுக்க முடியாதா?

பதில்:- உங்கள் நீண்ட கேள்வியில் பல உப கேள்விகளும் அடங்கியுள்ளன. எனவே விரிவாகப் பதில் சொல்ல வேண்டியுள்ளது. நாரிப்பிடிப்பிற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. பிறப்பிலேயே முதுகெலும்பிலுள்ள முன்வளைவு (Lordosis), பின்வளைவு (Kyphosis), பக்க வளைவு (Scoliosis) போன்றவையும் ஒருசில காரணங்களாகும்.

ஆனால் உங்களுக்கு வந்திருப்பது முள்ளந்தண்டு எலும்போடு சம்பந்தப்பட்ட சற்றுக் கடுமையான வகை. நாரி உளைவுடன் ஒரு காலும் வலிக்கிறது என்று எழுதியிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் முள்ளந்தண்டிலிருந்து பிரிந்து செல்லும் நரம்பு ஒன்று அழுத்தப்படுவதனால் எனத் தெரிகிறது. உங்கள் கேள்விக்கு விடையளிக்கும் முன் முள்ளந்தண்டின் அமைப்புப்பற்றி சிறிது பார்ப்போம்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

### முள்ளந்தண்டின் அமைப்பு


முதுகின் நடுவில் முள்ளந்தண்டு எலும்புகள் வரிசையாகச் சங்கிலிபோல் தொடுக்கப்பட்டு, தசை நார்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

முள்ளந்தண்டு எலும்புகள் ஒன்றன் மேல் ஒன்றாக இடைத் தட்டம் எனும் புரதத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் புரதமே முதுகு எலும்புகள் ஒன்றுக்கொன்று நசுங்காது பாதுகாக்கவும், முதுகை வளைக்கவும் உதவுகின்றது. இப் புரதப்பொருள் நடுவில் பஞ்சு போன்றும், அதனைச் சுற்றிக் கடுமையாகவும் இருக்கும். முதுகுஎலும்புகளில் திடீரென அழுத்தம் அதிகமாகும் போது இந்தப் பஞ்சு போன்ற பொருள், முதுகு எலும்பின் நடுவில் இருக்கும் முண்ணானை அல்லது அதில் இருந்து பிரிந்து செல்லும் நரம்பை அழுத்தும். அப்போது வலி உண்டாகிறது.

உங்கள் இடது கால் வலிப்பதற்குக் காரணம், இடது பக்க நரம்பு ஒன்று அழுத்தப்படுவதனாலேயே ஆகும். எனவே சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை அணுகுங்கள். அவர் Xray எடுத்துப் பார்த்து வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவார்.

### எலும்புத் தேய்வு

உங்களுக்கு இப்பிரச்சினை வந்ததற்கு எலும்புகளின் அடர்த்தி குறைகின்ற Osteo porosis நோய் காரணமாக இருக்கலாம். மாதவிடாய் நின்ற பெண்களுக்கு அதிலும் முக்கியமாக 50, 60 வயதிற்குப் பின் எலும்பின் அடர்த்தி குறைவதுண்டு. போஷாக்கு குறைந்த, முக்கியமாக கல்சியம் (சுண்ணாம் புச் சத்து) குறைந்த உணவை உட்கொள்பவர்களுக்கு




இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

அத்துடன் உங்களுக்கு ஆறு குழந்தைகள் என எழுதியிருந்தீர்கள். அதிக குழந்தைகளைப் பெறும் போது உங்கள் உடலில் உள்ள கல்சி யம் சத்து குறைகின்றது. மேற்கூறிய மூன்று காரணங்களும் அதாவது போஷாக்கின்மை, அதிக பிள்ளைகள், மாதவிடாய் நின்றமை ஆகியவை உங்களது ஒஸ்டியோபொரோசிஸ் நோய்க்குக் காரணமாக இருந்திருக்கலாம். இந் நோய் காரணமாக உங்களது முள்ளந்தண்டு எலும்பின் அடர்த்தி குறைந்து நசிவுற்றமையால் முதுகு வலி ஏற்பட்டிருக்கும் என எண்ணுகிறேன்.

### இடைத்தட்டம் விலகல்

உங்களது நாரிப்பிடிப்பு படிப்படியாக வந்தது. ஆனால் வேறு சிலருக்குத் திடீரென் வருவதுண்டு. அப்படிப்பட்ட பலர் தமக்கு இவ் வலி வந்த காரணத்தையும், நேரத்தையும் சரியாகக் கூறுவார்கள். உதாரணமாக 'காலையில் அம்மிக் கல்லைத் தள்ளி வைப் பதற்காக குனிந்து தூக்கினேன். அப் பொழுது திடீரென பிடித்தது' எனக் கூறக் கூடும்.

அதாவது பெரும்பாலும் குனிந்து பாரம் தூக்கும் போது சடுதியாக ஏற்படுகிறது. உடனே அப்படியே படுக்கவேண்டிய நிலை கூட ஏற்படலாம். திடீரென செய்யும் பளுவான வேலையால் முள்ளந்தண்டு இடைத் தட்டத்தின், வெளிப்புறக் கடும்பகுதியில் வெடிப்பு உண்டாகும். இதனால் நடுவில் இருக்கும் மென்பகுதி வெடிப்பின் பிற்பகுதியால் வெளியேறி நரம்புகளை அழுத்தி வலியை ஏற்படுத்துகிறது. இதை முள்ளந்தண்டின் இடைத்தட்டம் விலகல் (Prolapsed intervertebral Disc-PID) எனக் கூறுவார்கள்.

*தடுப்பது எப்படி*

1) தடுப்பு நடவடிக்கைகளைச் சிறுவயதிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். போஷாக்குள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும். முட்டை, பால், கீரை வகைகள், நெத்தலி போன்ற கல்சியம் அதிகமுள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும். குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இது முக்கியமானது.

2) குழந்தைகளை அதிகமாகவும், போதிய கால இடைவெளி இன்றிப் பெறுவதையும் தவிர்க்கவேண்டும்.

3) பள்ளி மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிக்கும் போது முதுகின் தசைகள் பலம் பெறப் பயிற்சியளிப்பது முக்கியம்.

4) பொருட்களைத் தூக்கும்போது முக்கியமாகக் கனமான பொருட்களை தூக்கும் போது, முதுகை வளைத்துக் குனிந்து தூக்குவது முள்ளந்தண்டு எலும்பைப் பாதிக்கும். எனவே முதுகை வளைக்காது முன்னங் கால்களை மடக்கி உட்கார்ந்து பொருட் களைத் தூக்கவேண்டும். கனமான பொருட் களை தூக்கவேண்டியிருப்பவர்கள் மாத்திரமன்றி எல்லோரும் இதைப் பழக வேண்டும்.

## மருத்துவ விளக்கம்

5) நாற்காலியில் அமர்ந்திருந்து எழுதும் போதும், படிக்கும் போதும் முதுகை முன் பக்கமாக மேஸ்சயை நோக்கி வளைத்திருந்து வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள், தட்டெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்கள், கணனியில் வேலை செய் பவர்கள் போன்றோர் நீண்டநேரம் நாற்காலியில் உர்கார்ந்திருக்க வேண்டிய நிலை இருப்பதால் முதுகை வளைக்காமல் வேலை செய்யப் பழகவேண்டும். இடை இடையே முதுகு நாற்காலியோடு ஒட்டியிருக் கும் நிலையில் கால்மேல் கால்போட்டுக்கொண்டு இருக்க வேண்டும். தொடை நிலத்திற்குச் சமாந்தரமாக இருத்தல் வேண்டும்.

6) அதிக நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்து வேலைசெய்வதும் கூடாது. கார் ஓட்டும்போதும், சினிமா, ரீவி பார்க்கும் போதும், அலுவலகத்தில் வேலை செய்யும் போதும் நாம் நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறோம் இது முள்ளந்தண்டைப் பாதிக்கும். ஒரு மணி நேரத்திற்கு மேல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தால் சிறிது எழுந்து நடந்து பிறகு மறுபடியும் உட்காரலாம்.

7) உட்காரும் ஆசனத்தின் உயரமும் முக்கியமானது. மிகத் தாழ்ந்த கதிரைகளும் நாரிப்பிடிப்புக்கு வழி வகுக்கலாம். பாதங்கள் நிலத்தில் படுமாறு நிமிர்ந்து உட்காரும் போது முழங்கால்கள் செங்குத்தாக மடிந்திருக்குமேயாயின் அது சரியான உயரமுள்ள கதிரை எனச் சொல்லலாம்.

8) தூங்கும் போது குப்புறப் படுத்துத் தூங்கு வது கூடாது. ஏனெனில் இது முள்ளந்தண்டின் இயற்கை வளைவை பாதித்து நாரிப் பிடிப்பிற்கு வழிவகுக்கும். நிமிர்ந்து படுப்பது நல்லது. பக்கவாட்டில் முழங்காலை மடித்து ஒரு தலையணையுடன் உறங்குவது நல்லது. படுக்கை முதுகை வளைக்காத அளவிற்கு கடினமாக இருக்கவேண்டும்.

9) படுக்கையில் இருந்து எழுந்திருக்கும் முறை.

*1. படுக்கை உறுதியாக இருக்கவேண்டும். முதுகில் வலியிருந்தால் முழங்காலுக்குக் கீழே தலையணை ஒன்று வைக்கலாம்.*

*2. படுக்கையில் இருந்து எழுந்திருக்கும் முன்னர் ஒரு கையைத் தலைக்குமேல் படுக் கையோடு ஒட்டியபடி வைத்து உடலில் ஏதேனும் ஒரு பக்கம் திருப்பி மற்றொரு கையை மார்புக்கு முன்னால் மடக்கிபடுக்கையின் விளிம்பில் கெட்டியாகப் பிடிக்கவும்.*

*3. கைகளை ஊன்றி உடலின் எடையை கைகளில் பொறுக்கவைத்து உடலை நிமிர்த்தவும்.*

*4. கால்களை நிலத்தில் ஊன்றி மெதுவாக கட்டிலிலிருந்து இறங்கவும்.*

*உடற்பயிற்சிகள்*

நாரிவலி வந்தவர்கள் இவ் வலி மீண்டும் வராதிருக்க உடற்பயிற்சி செய்வது அவசியம். பலவித உடற்பயிற்சிகள் நன்மையளிக்கும். ஆனால் நின்றுகொண்டு அல்லது உட்கார்ந்துகொண்டு குனிந்து காலை தொடுகின்ற பயிற்சிகளை, நாரிப்பிடிப்புள்ளவர்கள் ஒரு போதும் செய்யக்கூடாது.

இரண்டு உடற்பயிற்சிகளைக் கூறுகிறேன். இரண்டையும் செய்யலாம். முடியாவிடில் முதலில் முதலாவது பயிற்சியைச் செய்யுங்கள். சிறிது காலத்தின் பின் இரண்டாவது பயிற்சியையும் செய்யுங்கள்.

*முதலாவது பயிற்சி*

குப்புறப்படுத்துக் கொள்ளுங்கள். கைகல்ள பின்புறமாக மடித்து முதுகின் மேல் வையுங்கள். தலையை உயர்த்துங்கள். இவ்வாறு பத்து செக்கன்ட் இருந்த பின் தலையைக் கீழே வைத்து ஐந்து செக்கன்ட் ஓய்வெடுங்கள். மீண்டும் முன்போலவே தலையை உயர்த்துங்கள். இவ்வாறு காலையும், இரவும் இருபது தடவை செய்யுங்கள்.

*இரண்டாவது பயிற்சி*

முன்பு போலவே குப்புறப்படுங்கள். இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு சற்று உயர்த்துங்கள். அதே நேரம் தலையையும் உயர்த்துங்கள். பத்து செக்கன்ட் இப்படியே இருங்கள். சில செக்கன்ட் ஓய் வெடுத்துவிட்டு மீண்டும் தொடருங்கள். ஐந்து முதல் 10 தடவைகள் இவ்வாறு காலையும் மாலையும் செய்யுங்கள்.

முன்பு மஞ்சள் நிறக் கூட்டுக்குளிசை பாவிப்பதாக எழுதியிருக்கிறீர்கள். மஞ்சள் நிறக் கூட்டுக்குளிசை என்பது (Indome thacine) ஆக இருக்க வேண்டும். அது ஒரு வலி நிவாரணி. அது வலியைத் தணிக்க உதவுமேயன்றி நோயைக் குணமாக்காது. எனவே முன்பு கூறிய உடற்பயிற்சிகளை செய் வதே நல்லது. அத்துடன் இத்தகைய வலி நிவாரணிகளுக்குப் பல பக்கவிளைவுகள் இருக்கலாம். ஒருமுறை எழுதித் தந்த மாத் திரைகளை தொடர்ந்து உபயோகிப்பது நல்லதல்ல.

நன்றி: நீங்கள் நலமாக நலவியல் நூல்

# கலை இலக்கியப் போட்டி

காரைநகர் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கலை இலக்கியப் பேரவையால் கடந்த மாதம் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளின் விரபங்கள் வருமாறு,

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- செல்வி ஞானசோதி செல்வக்குமாரி -யா/க்லாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

1 ஆம் இடம்:- செல்வி கஸ்தூரி ஸ்ரீஸ்கந்தராஜா - யா/யாழ்ரன் கல்லூரி.

2ஆம் இடம்:- செல்வி அனுசா சந்திரன்- யா/கலா நிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

3ஆம் இடம்:- செல்வன் சதாசிவம் சிவதாஸ்-யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- இராசரத்தினம் இராஜேஸ்வரி-யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

2ஆம் இடம்:- நித்தியானந்தம் தவறஞ்சன்- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

3ஆம் இடம்:- கஜனி வரதராசா -யா/யாழ்ரன் கல்லூரி.

3ஆம் இடம்:- பஞ்சலிங்கம் கலைச்செல்வி- யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- சாம்பவி மயில்வாகனம்- யா/யாழ்ரன் கல்லூரி

2ஆம் இடம்:- கோகிலா கந்தசாமி- யா/யாழ்ரன் கல்லூரி.

3ஆம் இடம்:- சதாசிவம் சிவதாஸ் -யா/கலா நிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

**கவிதை - கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- சிவரஞ்சனி சிவானந்தராசா- யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.

2ஆம் இடம்:- இராசரத்தினம் இராஜேஸ்வரி- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

3ஆம் இடம்:- லக்சிகா ஸ்ரீஸ்கந்தராசா- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

**சிறுகதை - மட்டுப்படுத்தப்பட்டது**

1ஆம் இடம்:- கோகிலவாணிசுந்தரலிங்கம் -யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி.

2ஆம் இடம்:- கு.நிஷாகரன் -யா/கலா நிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தி.

3ஆம் இடம்:- பிரியதர்சினி இரகு நாதன்- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

**சிறுகதை - திறந்த போட்டி**

1ஆம் இடம்:- திருமதி ஜே.எம்.ஆனந்தராஜா - யா/யாழ்ரன் கல்லூரி.

2ஆம் இடம்:- செல்வி கந்தையா தவரஞ்சனா- பொன்னாவளை களபூமி காரைநகர்.

**பாடல் - திறந்த போட்டி**

1ஆம் இடம்:- ராஜ்குமாரு ஞானசோதி- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

2ஆம் இடம்:- செல்வகுமாரு ஞான சோதி -யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி.

3ஆம் இடம்:- றஜிதா சடாச்சரம் -யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம. ம. வித்தி. (அ-246)



பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கு வாரத்தில் 3 நாட்கள் பால் உணவு வழங்கப்படும் நிகழ்வில் மேற்படி சேவாச்சிரமத்தின் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா அவர்களும் கலந்துகொண்டார்.

விருந்தாளிக்கு உணவு வேண்டாம்; அவனை அன்பாக வரவேற்றாலே போதும்.

—அயர்லாந்து

வலம்புரி

## நோர்வேயின் முன்வருகையை இருகரம் கூப்பி வரவேற்கலாம்

அரசும், விடுதலைப்புலிகளும் சம்மதந் தெரிவித்தால் சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபடுவதற்கு தயாராக இருப்பதாக நோர்வே அரசு அறிவித்துள்ளது.

கடந்த காலத்தில் நோர்வே தனது சமாதானப் பணிக்கான ஈடுபாட்டை காட்டியுள்ளது. எனினும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசும்-விடுதலைப்புலிகளும் நோர்வேயின் உதவி தேவையெனக் கேட்கும் பட்சத்திலேயே தாம் இப் பணியை மேற்கொள்ளவுள்ளதாகவும் நோர்வே அறிவித்துள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினையில் சமாதான அனுசரணைப் பணியை வழங்கிய நோர்வேயின் முயற்சி காரணமாகவே யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பயனாக இரு தரப்பும் யுத்தத்தை நிறுத்தி அமைதியை கடைப்பிடித்தன. எனினும் 2002 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க முடியாமல் போயிற்று.

இதற்கு நோர்வே எவ்வகையிலும் காரணம் அல்ல என்பது தெரிந்த விடயமே. அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் நோர்வேயின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் எளிதில் மறந்து விடக்கூடியதல்ல.

எதுவித லாபமோ, உள் நோக்கமோ இல்லாமல் இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும். அதன் மூலம் பெறுமதியான மனித உயிர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உயரிய நோக்குடன் நோர்வேயின் சமாதான முயற்சி அமைந்திருந்தது.

எனினும் அந் நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் நடந்து கொண்டன.

குறிப்பாக ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் நோர்வேயின் சமாதான முயற்சிகளை கடுமையாகச் சாடின. நோர்வேயை வெளியேற்ற வேண்டுமெனக் கோஷமிட்டன. இதற்கு மேலாக நோர்வேயின் தேசியக் கொடியை எரித்து அந் நாட்டின் சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தின.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படுவதான குற்றச்சாட்டையும் தென்னிலங்கை அரசியல்கட்சிகள் முன்வைக்கத் தவறவில்லை.

இவையெல்லாம் நடந்தும் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் கேட்டால் சமாதான அனுசரணைப் பணியை மேற்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக நோர்வே அறிவித்துள்ளதனூடே, அந் நாட்டின் உயரிய பண்பும் சமாதானத்தின் மீது அந் நாடு கொண்டுள்ள பற்றுறுதியும் வெளிப்படுகின்றது.

இலங்கை இன விவகாரத்தில் பொறுமையுடனும் நிதானமாகவும் செயற்படும் நாடு என்ற வகையில் நோர்வேக்கு ஈடாக எந்த நாடுமே வந்துவிட முடியாது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடந்த போது பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான இடத்தை வழங்க இந்தியா மறுத்திருந்தது.

அண்டை நாடான இந்தியாவுக்கு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் தலையிடும் தார்மீகப் பொறுப்பிருந்த போதும் அதிலிருந்து அந் நாடு விலகிக் கொண்டது.

இப்போது கூட தனது பிராந்திய பாதுகாப்பு என்ற வகையில் இந்தியாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளனவே தவிர, இலங்கையில் அமைதியான சூழ்நிலை-நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டுமென்ற நினைப்பு அறவே இல்லை.

இந்நிலையில் அரசும் விடுதலைப்புலிகளும் விரும்பிக் கேட்டுக்கொண்டால் சமாதான அனுசரணைப் பணியை வழங்க தயாராக இருப்பதாக நோர்வே விடுத்த அறிவிப்பை இருகரம் கூப்பி வரவேற்கலாம்.

## சென்னைத் துறைமுகத்தில் அமெரிக்க அணுசக்திக் கப்பல்

பல்வேறு தரப்பு எதிர்ப்புக்களையும் மீறி அமெரிக்க அணுசக்திக் கப்பலான நிமிட்ஸ் சென்னைக்கு நேற்றுக் காலை சென்றுள்ளது. அமெரிக்காவின் மிகப்பெரிய போர்க் கப்பல் யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ். அணு சக்தியால் இயங்கும் இந்த போர்க் கப்பல் ஈராக் போரில் பெரும் பங்கு வகித்தது. இந்தக் கப்பலை தளமாகப் பயன்படுத்தித்தான் ஈராக் மக்கள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு வீசி தாக்கியழித்தன. இக் கப்பலில் இரண்டு அணு உலைகள் உள்ளன. இக் கப்பல் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலாவாக சென்று வருகிறது.

இச் சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக சென்னைத் துறைமுகத்துக்கு வர விருப்ப தாக சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து அணு சக்தியுடன் கூடிய இந்தக் கப்பல் சென்னைக்கு வந்தால் சென்னை நகருக்கும் தென் மாநிலங்களுக்கும் பெரும் ஆபத்து ஏற்படும் என்று இடது சாரிக் கட்சிகள், அ.தி.மு.க., பா.ஜ.க., ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித் தன. ஆனால் கப்பலால் எந்த வித பாதிப்பும் இல்லை என்று அமெரிக்கத்தூதரக அதி காரிகளும் இந்திய இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனியும் மறுத்தனர். இந்த நிலையில் பல்வேறு எதிர்ப்புக்களையும் மீறி நிமிட்ஸ் கப்பல் நேற்று சென்னைக்குச் சென்றது. காலை 6 மணிக்கு சென்னையை நெருங்கிய இந்தக் கப்பல் துறைமுகத்தில் இருந்து 3 1/2 கிலோ மீற்றர் தூரத்தில் நிறுத்தப்பட்டது. நிமிட்ஸ் கப்ப லில் 6 ஆயி ரம் போர் வீரர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் சிறிய கப்பல் கள் மூலம் சென்னைத் துறைமுகத்துக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

எழும்பூர் இராஜரத்தினம் ஸ்ரேடியத்திற்கு வரும் அவர்கள் அங்கிருந்து பல்வேறு பிரிவுகளாக பேருந்துகள் மூலம் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். இதற்கிடையே நிமிட்ஸ் கப்பலால் ஆபத்து ஏதும் உள்ளதா? என்பதை கண்காணிக்கவும் இந்திய கடலியல் பகுதியை பாதுகாக்கும் நோக்கத்துடனும் இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஒரு போர்க்கப்பல் சென்னைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இக் கப்பல் நிமிட்ஸ் கப்பலை கண்காணித்தபடி இருக்கும். இதில் அணுசக்தித் துறையை சேர்ந்த விஞ்ஞானிகள் அடங்கி குழு தங்கியிருப்பார்கள் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் கப்பலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடது சாரிக்கட்சிகள் ஒன்றிணைந்து சென்னைத் துறைமுகம் எதிரில் ஆர்ப் பாட்டம் செய்யவுள்ளனர். (ச-5)

## வவுனியாவில் ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் ஆயுதங்களையும் 11 கண்ணி வெடிகளையும் கைப்பற்றியதாக இராணுவம் தெரிவித்துள்ளது. வவுனியா 14 ஆம் கொலனி, அண்ணாமலைப் பிரதேசத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது பல ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, அதற்குப் பயன்படுத்தும் மகசீன்கள் 2, ரி 56 துப்பாக்கி ரவைகள் 48 ஆகிய மீட்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் வவுனியா பிரதேசத்தில் 11 கண்ணிவெடிகளை மீட்டு செயலிழக்கச் செய்ததாகவும் இரணை இலுப்பைக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலை இராணுவத் தினர் முறியடித்துள்ளதாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## கல்வி நிர்வாக சேவை பயிற்சிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (எஸ்.எல்.ஈ.எஸ்) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சிகள் நிதி நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பயிற்சி பெற்று வந்த 476 பேரும் கடமைப்பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த வருடம் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 476 பேருக்கு மாகாண மட்டத்தில் கள நிலைப்பயிற்சியும் தேசிய மட்டத்தில் நிலையப் பயிற்சியும் வழங்கப்பட்டு வந்தன.

ஆறு மாதப் பயிற்சியில் மூன்று மாதங்கள் களநிலைப் பயிற்சியும் மூன்று மாதங்கள் தேசிய மட்டத்தில் ஒவ்வொரு மாதம் என்ற அடிப்படையில் மினிப்பே, சீடா, தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றில் நிலையப்பயிற்சியும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

மேற்படி பயிற்சிகளை உரிய முறையில் வழங்கி முடிப்பதற்கு உரிய நிதிவளம் குறைவடைந்துள்ளமையினால் பயிற்சிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. பயிற்சியில் ஈடுபட்டு வந்த 476 பேரும் பெற்று வந்த பயற்சி களங்களில் இருந்து யூலை முதலாம் திகதி தொடக்கம் கடமைப் பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் மார்ச் 14 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகி நடைபெற்று வந்தன. விசேட பாடத்துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஒன்பது மாகாண கல்வித் திணைக்களத்தின் மேற்பார்வையில் பாடசாலை, வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வி அமைச்சு என்பனவற்றில் களநிலைப் பயிற்சியும் பொதுத்துறைக்குத் தெரிவு செய் யப்பட்டவர்களுக்கு தேசிய கல்வி நிறுவகம், சீடா மத்திய நிலையம், மினிப்பே பயிற்சி மையம் என்பனவற்றில் மத்திய கல்வி அமைச்சின் மேற்பார்வையில் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. பயிற்சிகள் அனைத்தும் யூன் 24 ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## ஐ.தே.கவுடன் இணையவேண்டியதில்லை அரசைக் கவிழ்ப்பதே இன்றைய தேவை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணையுமாறு நாம் கோரவில்லை. மாறாக அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே அனைவரையும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பி.உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். இந்த அரசாங்கத்தின் கீழ் மக்களால் வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது; பதவியில் உள்ள அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. தற்போதைய நிலையில் நாட்டு மக்களால் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

எனவே அரசாங்கத்துக்கு விரோதமான அனைத்து அரசியல் கட்சிகளையும் ஓரணியின் கீழ் திரளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். பொதுக் கூட்டணி ஒன்றை அமைத்து அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று கோரிக்கை விடுக்கின்றோம். சிறுபான்மைக் கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த பொதுக் கூட்டணியில் இணைந்து கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜே.வி.பி. என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்று தெரியவில்லை. இருப்பினும் அழைப்பு விடுக்கவேண்டியது எமது கடமையாகும். ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு நாங்கள் அழைப்பு விடுக்கவில்லை. மாறாக பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து செயற்பட ஒன்றிணையுமாறே கோருகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்று 18 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் மகிந்த சிந்தனையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மக்கள் வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். அரசாங்க மட்டத்தில் ஊழல் அதிகரித்து விட்டது. 2004 ஆம் ஆண்டுக்கு பின்னர் 17 தடவைகள் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு விட்டன.

2004 ஆம் ஆண்டு 12 ரூபாவாக இருந்த பாணின் விலை தற்போது 29 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. யுத்தத்தை விற்றுப்பிழைக்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந் நிலையில் நாட்டின் இந்த அபாயகரமான நிலைமையை தொடரவிட முடியாது. ஆட்சி மாற்றம் இடம் பெறவேண்டியது கட்டாயமாகும். அதற்கான முயற்சிகளையே நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் என்றார் அவர். (ச-5)

## அமைச்சரின் வீட்டை படமெடுத்த இருவர் கைது

(கொழும்பு)

கண்டியில் உள்ள மின் சக்தித்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் வீட்டை படமெடுத்ததாகக்கூறி இந்தியர் ஒருவரும் பல்கலைக்கழக மாணவி ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சரின் வீட்டுக்கு அருகில் அவர்கள் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாகவும் அந்த வீட்டை படமெடுத்ததாகவும் கிடைத்த ரகசிய தகவலையடுத்தே அவர்களை கைது செய்ததாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## ஆசிரியர் கலாசாலைகளின் விரிவுரைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஆசிரிய கலாசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட பயிற்சி ஆசிரியர்களுக்கான விரிவுரைகள் இம் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இலங்கையில் உள்ள ஒன்பது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் பயிற்சி நெறிகளுக்கும் ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் யூன் மாதம் நடைபெற்றன.

நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் இம் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சியை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட ஆசிரிய கலாசாலைகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல்களை அனுப்பி வைத்தும் சம்பந்தப்பட்டவர்களின் பயிற்சிநெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. (எ-5)

# அரச அதிகாரிகளின் வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்படும்

## பொலிஸார் அறிக்கை

வட பகுதியிலிருந்து தெற்குப் பகுதிக்குச் செல்கின்ற அரசாங்க அதிகாரிகளின் வாகனங்களும் இனிவரும் காலங்களில் முழுமையான பாதுகாப்புச் சோதனைக்குட்படுத்தப்படும் என நேற்று வெளியான பொலிஸாரின் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் வடமேற்கு மன்னார் மாவட்டங்களிலிருந்து தென்பகுதிக்குச் செல்கின்ற அரச வாகனங்கள் அனைத்தும் பொலிஸாரின் முழுமையான சோதனைக் குட்படுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்று ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் காட்டியதன் பின்பே பிரயாணத்தைத் தொடர வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு வன்னிப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த அரசாங்க அதிபர், மாவட்ட நீதிபதி, மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும் வைத்தியத்துறை அதிகாரி ஆகியோருக்கு இத்தகைய சோதனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க உயர் அதிகாரி ஒருவரின் வாகனத்தில் குண்டு மறைவாக பொருத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான தகவலினைச் சுட்டிக்காட்டி அரசாங்க அதிகாரிகளுக்குப் பொலிஸாரின் வாகனச் சோதனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த சலுகை இதன்மூலம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன்காரணமாகவே இச்சோதனை நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார். (ச-3)

# மட்டக்களப்பில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவன்கேணியில் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி ஆர்.டி.எஸ்.வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு கிருஷ்ணபிள்ளை (வயது-37) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற பொலிஸார் மரண விசாரணைக்குப் பின்னர் அவரின் உடலை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். (எ-5)

# அமைதியாக நடைபெற்ற மடுத் திருவிழா

(மன்னார்)

நாட்டில் தோன்றியுள்ள அச்சநிலை மற்றும் போக்குவரத்து நெருக்கடி என்பவற்றினால் எதிர்பார்த்தளவு பக்தர்கள் கலந்து கொள்ளாத போதிலும் அமைதியான முறையில் மடுமாதா ஆலயத் திருவிழா நேற்று நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் வருடந்தோறும் நடைபெறும் மடுஅன்னை விழா நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. வருடந்தோறும் இவ்விழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்ற போதும் இன்றைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக மிகக் குறைந்தளவானோரே விழாவில் கலந்து கொண்டனர்.

தென்பகுதியிலிருந்து ஒருசிலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இப்பகுதியில் மின்சாரம், நீர்வெட்டு இருக்கின்றபோதும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது.

ஏனைய வசதிகள் வழமைபோன்று வழங்கப்பட்டிருந்தன. மடுக்கோவில் வீதி மூடப்பட்டுள்ளபோதும் உயிலங்குளம் பாதையால் பக்தர்கள் சென்று வர ஒழுங்குள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பக்தர்கள் சிரமமின்றி சென்று வந்ததாகவும் மடு வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின், தலைமையில் கூட்டுத் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஆயரின் மறையுரை சமாதானத்தை நோக்கிய வேண்டுகோளாக இருந்தது. அரசாங்கமும் புலிகளும் இரு தரப்பும் நல்ல புரிந்துணர்வுடன் சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் எதிர்வரும் ஆவணி மாத மடு விழாவுக்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ள ஆவலாகவிருப்பதுடன் மடுவீதி திறக்கப்பட்டு மடு அன்னையை வழிபட பக்தர்கள் சென்று வர வாய்ப்பு ஏற்பட வேண்டும் எனவும் ஆயர் கேட்டுக் கொண்டார். (ச)

# 4 இலங்கைத் தமிழர்களுக்கு 15 வருடச் சிறைத் தண்டனை

(மாலைதீவு)

மாலைத்தீவுகளில் உள்ள நீதிமன்றம் ஒன்று இலங்கைத் தமிழர்கள் 4 பேருக்கு 15 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. சட்டவிரோத சுடுகலன்கள் மற்றும் ஆயுதங்களை மாலைதீவுக்குள் கொண்டு வர முயற்சித்தார்கள் என்பது குற்றச்சாட்டுக்களில் அடங்குகின்றன.

மாலைதீவுக்குள் அத்துமீறி நுழைய முயன்றார்கள் என்ற குற்றத்திற்காகவே இவர்களுக்கு அதிகபட்சமாக 15 வருட் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாக மாலைதீவுகள் அரசின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# இலுப்பைக்குளம் முன்னரங்கில் நேற்றுத் தாக்குதல் சம்பவம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைக்கு மேற்கே இரணை இலுப்பைக்குளம் இராணுவ முன்னரங்கப் பகுதிகளில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் மீது இராணுவம் நடத்திய எதிர்த் தாக்குதலில் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதன் பின்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் நடத்திய தேடுதலின் போது விடுதலைப்புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த ஒருவரின் சடலம் கைப்பற்றப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்திய வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன், இந்தச் சடலம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினருக்கு அறிவிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் உரிமை கோரும் பட்சத்தில் இந்தச் சடலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் ஊடாக அவர்களிடம் கையளிக்கப்படும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-3)

## சி.டி.எம்.ஏ.தொலைபேசி...

குடாநாட்டில் ஆரம்பித்து வைத்தார்.

நேற்றிலிருந்து மோட்டடோரோலா பாவனையாளர்களுக்கான சேவைகள் சி.டி.எம்.ஏ.இணைப்பு மூலம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டையின் 2 பிரதிகள் மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம -சேவகரின் கடிதத்தையும் சமர்ப்பிப்பதன் மூலம் சி.டி.எம்.ஏ.சேவையினை விரைவாகப் பெற முடியும் எனவும் வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

புதிதாக விண்ணப்பிப்போரும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பித்து சி.டி.எம்.ஏ. சேவையினைப் பெறுவதை விரைவுபடுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

சி.டி.எம்.ஏ.இணைப்பு நாளாந்தம் நூறு இணைப்புக்கள் வீதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வட மாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் வி.யோகேந்திரன், இவ்வருட இறுதிக்குள் 10 ஆயிரம் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் யாழ்.குடாநாட்டில் வழங்கப்படும் எனவும் கூறினார். (ச-5)

## கண்காணிப்புக் குழுவின் பணிகள்...

போதிய ஆட்பலம் இல்லாதிருந்தது. ஆனாலும் அதிர்ஷ்டவசமாக நாம் இப்போது புதிய உறுப்பினர்களை உறுப்பு நாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினார்.

சில தினங்களுக்கு முன்பதாக ஐந்து உறுப்பினர்கள் அங்கிருந்து இலங்கை வந்து சேர்ந்துள்ளார்கள். இதன்மூலம் வவுனியா மற்றும் கிழக்கு மாகாணம் போன்ற பகுதிகளில் வழமைபோல எமதுகண்காணிப்புப் பணிகளை முழுஅளவில் மேற்கொள்ள எமக்கு இப்போது ஆட்பலம் கிடைத்துள்ளது.

எமது உறுப்பினர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நாம் ஸ்திரப்படுத்தி வருகின்றோம். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே கடந்த ஜனவரி மாதம் கொழும்பிற்குச் சில உறுப்பினர்கள் திருப்பியழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களது பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ள நாம், முன்பு போல் நாட்டின் முக்கிய பிரதேசங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட தற்போது திட்டமிட்டுள்ளோம் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் மேலும் கூறினார். (ச-3)

## நோர்வேக் குழு கிளிநொச்சி...

வர்களாக்கவே அனைத்துலகம் சதி முயற்சி செய்கின்றது.

நோர்வேயூடாக இந்தச் சதி மேற்கொள்ளப்படுகின்றது. கவலைக்கிடமான இந்தச் சதியில் அரசாங்கம் சிக்கியுள்ளது. அரசாங்கம் அழைத்தால் மட்டுமே நோர்வேத் தரப்பினர் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இதுதான் முறை.

எனவே நோர்வேயை அழைப்பதன் மூலம் இந்தச் சதி முயற்சிக்கு அரசாங்கம் இடமளிக்கக் கூடாது. அனைத்துலகத்தின் தேவைகளுக்காகவே நோர்வே இலங்கை விடயத்தில் தலையிட்டு வருகின்றது. அத்துடன் ஹான்ஸன் பௌயரை கிளிநொச்சிக்கு அனுப்பினால் புலிகளுக்கு நோர்வே நிதியுதவியையும் ஆயுதப் பயிற்சியை யும் வழங்கும்.

கிழக்கில் வெற்றியீட்டும் படையினரை இது அவமதிக்கும் செயலாகும். எனவே நோர்வேயை அழைத்துப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்துகின்றோம் என்றார் விமல் வீரவன்ச. (ச-5)

## இலங்கைப் பாதுகாப்பு...

யப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் டரோ அசோவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின் போது இலங்கை - யப்பான் ஆகிய நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங் கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்களை மீள் குடியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்தும் முகமாக இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 370 மில்லியன் ஜென்களை இலங்கைக்கு வழங்க தமது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக யப்பானிய வெளிவிவகார அமைச்சர், றோகித போகொல்லாகமவிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக இலங்கை அதிக கவனம்செலுத்த வேண்டியுள்ளதாக யப்பான் வெளிவிவகார அமைச்சர் டரோ அசோ தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.தே.க.எம்.பி. ஜெயலத்...

தனது அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறும் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன அறிவித்திருந்தார்.

ஆனால் அவரின் கோரிக்கையை ஏற்க மறுத்த பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுப் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வு அலுவலகத்திற்கு விசாரணைக்காக முன்னிலையாகுமாறு கோரியிருந்தனர்.

அதற்குப் பின்னர் அவரது பாதுகாப்பும் குறைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகத் தனக்குத் தொலைபேசியில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக ஜெயலத் ஜெயவர்த்தன நாடாளுமன்றத்திலும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் முறையிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கடும் விசாரணைக்கு ஜெயலத் ஜெயவர்த்தன உட்படுத்தப்பட்டிருக்கின்றார். நேற்று நடந்த விசாரணைகளின் போது வன்னிக்குச் சென்று வந்தமை குறித்தே அதிகநேரம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் வினாவியதாகக் கூறிய அவர்,

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் தன்னை மிரட்டும் நோக்கிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் அரசாங்கம் தன்னை அச்சுறுத்திப் பணிய வைக்க முயல்கின்றது என்றும் தெரிவித்தார்.

சுமார் ஐந்து மணிநேரம் விசாரணைக் குட்படுத்தப்பட்ட ஜெயலத் எம்.பி. பின்னர் விடுவிக்கப்பட்டார். (ச-3,5)

## இடைக்கால குடிசன மதிப்பீட்டை...

யிலேயே அக் குழு இம்மகஜ ரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள சாராம் சம் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் இடைக்காலக் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு விடுத்துள்ள தீர்மானத்தால் நாம் கவலையும் குழப்பமும் அடைந்துள்ளோம். எனவே இக் குடிசன மதிப்பீட்டைப் பிற்போடுமாறு உணர்வுபூர்வமாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

2001 ஆம்ஆண்டு முடிவுறாத யுத்தத்தினாலும் பொருளாதார நெருக்கடிகளினாலும் பாதுகாப்புக் காரணங்களாலும் உள்நாடு, வெளிநாடு இடப்பெயர்வுகளாலும் குடிசன மதிப்பீடு நடை[illegible]வில்லை.

20[illegible] ஆம் ஆண்டு ஏனைய மாவட்டங்களையும் உள்ளடக்கி தேசிய ரீதியாக நடைபெறும் குடிசன மதிப்பீட்டுடன் யாழ்.மாவட்டக் கணிப்பையும் மேற்கொள்ளுமாறு கேட்கின்றோம்.

அப்போதுதான் நடைபெற்று வரும் யுத்தம் முடிபுற்று அமைதியான சூழ்நிலை ஒன்று ஏற்படும் என நம்பிக்கை கொண்டுள்ளோம். தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தினால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தோர் பாதுகாப்புக்காரணங்களால் இலங்கையில் பல பாகங்களிலும் குறிப்பாகக் கொழும்புப் பகுதிகளிலும் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் 10 ஆயிரம் பேர் வரையில் தமிழ் நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் பல்வேறு நாடுகளில் தற்காலிகமாக வாழ்கின்றனர்.

இவர்கள் யுத்தம் முடிபுற்று அமைதி நிலை ஏற்பட்டால் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்புவர். பல குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் பாதுகாப்புக் காரணங்களால் வெளிமாவட்டங்களில் தங்கியுள்ளனர்.

சமாதானம் வருமிடத்து பெரும்எண்ணிக்கையானோர் வீடு திரும்பிவிடுவர் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மகஜரை சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் சார்பில் தலைவர் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இணைச் செயலாளர் முன்னாள் குழுமுதல்வர் அருட்தந்தை செல்வராஜா அடிகளார் ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர். (ச-5)

## இ.தொ.கா...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் தம்பக்கம் இழுக்கும் முயற் சியை அவர்கள் தற்போது தொடங்கியுள்ள னர்.

இந்தச் சந்திப்புக் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கருத்துத் தெரிவித்த போது, சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவின் வேண்டுகோளுக்கிணங்க தாம் அவருடன் பேசத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். (எ-5)

இப்பத்திரிகை [illegible] அன்.கோ[illegible]பாலத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.